"மதுவிலக்குத் தூதன்" சந்தாதாரராகிய எமது அன்பர்களனைவருக்கும் புது வருஷ வாழ்த்து சொல்லுகிறோம். சென்று போன வருஷத்திலே நம்மெல்லாரையும் வழிநடத்தி இந்தப் புதிப வருஷத்தைக் கண்டு களிக்கும்படி அருள் புரிந்த கருணையுள்ள தேவன், இந்த நவ வருஷத்திலும் நம்மோடிருந்து நம்மைக் கிருபையாய் வழி நடத்துவாராக. இந்த 1910-ம் வருஷம் நமது நேயர்களெல்லாருக்கும் புதிய ஆசீர்வாதங்களையும் பாக்கியங்களையுங் கொண்டு வருகிற மங்களாகரமான புதிப ஆண்டாயிருக்கவேண்டுமென இருதயப்பூர்வமாய்விரும்புகிறோம். காலம் பறந்து போகிறது. நாம் இருக்க விருக்க நித்தியத்துக்குச்சமீபிக்கிறோம். நம்மிலநேகர் கர்த்தர் கருணையாயளித்த விலையேறப்பெற்ற நாட்களை வீணாகக் கழித்துவிட்டோம். சிலர் நாட்களினருமையை நினைத்து நம்மாலியன்றவளவில் ஆண்டவருடைய திருவூழியத்தைச் செய்யமுயன்றும் திருப்தியற்ற விதமாய்ச் செய்திருக்கிறோம். முன்னாக விருக்கும் காலங்களில் நமக்குக் கர்த்தர் என்னத்தை வைத்திருக்கிறாரென்றறிய மாட்டோம். ஒருவேளை "அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை யறியேன்; கட்டுகளும் உபத்திரங்களும் எனக்கு வைக்கப்பட்டிருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்" என்று அந்த நல்ல பத்தனைப்போல சொல்லவேண்டியர்களாயிருக்கிறோம். ஆகையால் நம்பிக்கையோடும் தைரியத்தோடும், இந்த ஆண்டிலாவது என்னிடத்திலே ஆண்டவர் ஒப்புவித்த பணிவிடையைக் கூடியமட்டில் திருப்திகரமாய் நிறைவேற்ற முயல்வேன் என்கிற பரிசுத்த தீர்மானத்தோடும் இந்நவ ஆண்டை ஆரம்பிக்கப்போமாக. இதுகாறும் செய்யாமல் விட்ட பல நல்ல காரியங்களை இவ்வருஷத்தில் செய்ய முயலுவோமாக. இதுவரையில் நாட்களை வீணாக்கியிருந்தால் இனிமேலாவது உபயோகமான வழியில் ஆதாயப்படுத்துவோமாக. பொது ஜனோபகார விஷயத்தில் இதுவரை அசிரத்தைக் காட்டியிருந்தால் இனிமேலாவது சிரத்தை வகித்து நடந்துவோமாக. மதுவிலக்கு விஷயம் போன்ற பரோபகார விஷயத்தில் இம்மட்டும் நினைவற்றிருந்த போதிலும் இப்புதிய வருஷத்தில் சற்று உற்சாகங்காட்டி இந்தவழியிலுழைக்க முற்படுவோமாக. மதுவிலக்குத் தூதன் பத்திரிகை இவ்வருஷாரம்பத்திலிருந்து புதிய உயிரடைந்து ஊக்கமான ஆவியோடு வெளிவந்திருப்பதால் இதைக் கைசோர விடாமல் நம்மாலான

மட்டில் ஆதரிப்போமென நிர்த்தாரணம் செய்துகொள்ளக்கடவோம். எம்மைப் பொருத்த மட்டில் இந்நவ ஆண்டில்கர்த்தருடைய கிருபையைக் கொண்டு இப்பத்திரிகையைப்பிரயோஜனகரமானவழியிலெல்லாம் உபயோகப்படும்படி நடத்தவேண்டுமென்று விழைவுற்றிருக்கிறோம். காலங்களைத்தமது கரத்தில் வைத்துக் கொண்டு எல்லாக் காரியங்களையும் தமது திருவுளத்தின் ஆலோசனைப்படி நடத்துகிறவராகிய வல்லமையுள்ள ஆண்டவர் எமது நல்விழைவு சித்தியுறச் செய்வாராக. அவ்வாறே எமது அன்பர்களுக்கெல்லாம் நீடிய ஆயுளையும் நல்ல விஷயத்தில் பாடுபடும்படியான பரிசுத்த சிரத்தையையுங் கொடுத்துத்தமது அளவற்ற நன்மையால் முடிசூட்டியருள்வாராக.

## Drink and Labourers.
## குடியும் கூலிவேலையும்.

தக்க வருமானமும் ஐசுவரியமுமுடையவர்கள் மாத்திரமன்று, தினப்பாடுபட்டு சொற்ப ஜீவனம் பண்ணும் பரம ஏழைகளும் குடியென்னுங் கொடிய பேய்க்கு அடிமைப்பட்டுக் கெட்டழிந்து போகிறார்களென்பது சகலருக்குந்தெரிந்த விஷயம். அவைருடகம் கூலியெடுத்துப்பிழைக்கும் ஏழைகளும், சொற்ப வருமானமுள்ள தொழிலாளிகளும் தங்களுடைய கிஞ்சித் வருமானத்தைக் குடியிலே செலவழித்துவிட்டு, உண்ண உணவுக்கும் உடுக்க வஸ்திரத்துக்கும் விதியின்றி படுகிறபாடு பெரிதாயிருக்கிறது. இத்தேசத்திலே மட்டுமன்று; எல்லா இடங்களிலும் கூலி வேலை செய்வோரான தொழிலாளிகள் குடியினாலே மிதமிஞ்சி கெட்டுப்போகிறார்கள். இவர்கள் இத்துர்ப்பழக்கத்தால் தங்கள் சொந்த குடும்பத்துக்கும், தேசத்தின் க்ஷேமஸ்திதிக்கு ஞ்செய்கிற தீங்கு இவ்வளவு அவ்வளவென்றில்லை; தொழிலாளி ஒருவன் தன் வருமானத்தில் அரை வாசியை அல்லது முக்கால் வாசியைக் குடிக்கு எடுத்துக்கொள்ளுகிறான். மிச்சத்தை வீட்டிலே தன் மனைவியிடத்திலே கொண்டுபோய்க் கொடுக்கிறான். ஒருவேளை சாப்பாட்டுக்கும் போதாத அந்தத்தொகையைக் கொண்டு அந்த ஏழை மனுஷி எப்படி தன் குடும்பத்தைப் பசியின்றி சம்ரக்ஷிப்பாள்? தானும் தன் பிள்ளைகளும் தினந்தோறும் அரைவயிற்றுக்கும் போதாத ஆகாரத்தைச் சாப்பிட்டு நாளுக்குநாள் நலிந்துபோகிறார்கள். முக்கால்வாசியைக் குடித்துவிட்ட இந்த ஏழை மனுஷனாவது வயிறுநிரம்ப சாப்பிடுகிறானா? அதுவுமில்லை. அவனுக்கும் வயிற்றுக்கெட்டாத ஆகாரந்தான் கிடைக்கிறது. நாளாவர்த்தியில் அவனுடைய பலமும ஒடுங்கித் துர்ப்பலப்பட்டுப் போகிறான. அன்றியும் இப்படிப்பட்டவனுக்கு நல்ல உடையுமுண்டா? அவனுடைய பிள்ளை பெண்சாதியின் மானத்தைக் காக்க வஸ்திரமுண்டா? அந்தோ எத்தனை குடும்பங்கள் கட்டகந்தைக்கு நிர்வாகமின்றி கஷ்டப்படுகின்றன? இவ்வாறு கஷ்டப்படுவதை யுணர்ந்து வீட்டிலிருக்கிற ஸ்திரீ முறுமுறுப்பாளானால் அவளுக்குக்கிடைக்கிற தென்ன? அடியும் உதையும் தான். மூடர்களான புருஷர் தங்கள் வருமானத்தின் பெரும் பாகத்தைச் சாராயக்கடை கள்ளுக்கடையிவைகளில் கொண்டுபோய்க்கொட்டிக்கொடுத்து விட்டு, தங்கள் பெண்டு பிள்ளைகளைப் பசிக்கும் நிர்வாணத்துக்கும் ஆளாக்கித் தெருவில் அலையவிடுவது போதாதென்று, அவர்கள் நியாயமாய் ஏதாகிலுங்கேட்டால் அவர்களை அடித்திமிசிப்பது சகஜமாயிருக்கிறது. குடிகாரனுடைய வீடு பேயிருந்த நரக வீடுபோலிருக்கிறது.

உபத்திரவமும், நோயும், வறுமையும், பசியும், நிர்வாணமும் அவ்வீட்டிலே தாண்டவமாடுகின்றன. இவ்விதமாகப் பல குடும்பங்கள் குடி பழக்கத்தினாலே உண்ண உணவும் உடுக்க ஆடையுமின்றிச் சீரழிந்து நிலைகுலைந்து போகின்றன. தொழிலாளிகளுடைய குடும்பங்கள் இப்படியழிந்து போவதினாலே தேசத்தின் தொழிலுக்கும், அது காரணமாய் செல்வ வருவாய்க்கும் தீங்குண்டாகிறது. மேல் நாடுகளிலே பெருத்த தொழிற் சாலைகளிலே வேலை செய்வோர் வாரத்துக்கொருமுறை கூலி பெற்றுக்கொண்டு, மறுநாள் தலைகால் தெரியாமல் குடித்து மதிமயங்கிக் கிடப்பார்கள். இப்படி குடிக்கிறதின் பலனாக அவர்களுக்குண்டாகிற தலைநோய் முதலிய உபத்திரவங்களினால் இரண்டு மூன்று நாள் வேலைக்குப் போக சாத்திய மற்றுப் போகும். இதனாலுண்டாகிற நஷ்டம் இலக்ஷக்கணக்கான ரூபாயெனக் கூறப்படுகிறது. இந்த நஷ்டம் தொழிற்சாலை அதிபர்களை மட்டுமன்ற, தேசத்தையே பொருத்ததாகும். இப்படியாக கூலிவேலைசெய்வோர், தொழிலாளிகள் இவர்களிடங்குடிக்கொண்டிருக்கும் குடியென்னுந் துர்ப்பழக்கத்தாலுண்டாகிற கேட்டையார் அளவிட்டுச் சொல்லக்கூடும்? பொதுவாக சரீரப்பாடு பட்டுழைக்கிற இவ வகுப்பார் எல்லாருமே மது வருந்தப் பழகியிருப்பதற்கு அவர்களுடையகஷ்டப்பாடுதான் காரணமென்று சொல்லப்படுகிறது. ஒரு நாள் முழுதும் முதுகுதோல் விரித்துபோம்படியான வெயிலில் மூட்டை சுமந்து பாடுபடும் கூலிக்காரனும், காலைமுதல் மாலை மட்டும் கைவண்டி யிழுப்பவனும், உலைக்களத்திலே நெருப்பண்டையிருந்து வேகிற கருமானும், பின்னும், தச்சன், கன்னான், கொல்லத்துக்காரன், வண்ணான், செம்படவன், நெசவுகாரன்முதலிய தொழிலாளிகளும் நாள் முழுதும் கஷ்டப்பட்டதினா லடைந்த தேகசிரமத்தைப் போக்கிக் கொள்ள மாலையிலே கொஞ்சம் கள்ளோ சாராயமோ அருந்துதல் அவசிய மென்றும், அப்போதுதான் அவர்களுடைய சிரமந் தீர்ந்து மனதுக்குஞ் சரீரந்துக்குந் திடனுண்டாகிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். இது உண்மைதானா? ஒருபோதுமில்லை. கள்ளோ சாராயமோ சிரமப்பரிகாரஞ் செய்கிறதென்பதில் கிஞ்சித்தும் உண்மை கிடையாது. அந்தச் சமயம் அலுப்பை நிவிர்த்தி செய்து கொஞ்சம் உற்சாகத்தையும் சந்துஷ்டியையும் கொடுப்பதுபோலக் காணப்பட்டாலும் உண்மையிலே மதுபானம் தேகத்தின் நரம்புகளைப் பலஹீனம் செய்து அருந்துகிறவனைத் துர்ப்பலப்படுத்துகிறதென்று வைத்திய நிபுணர்களெல்லாம் ஏகவாக்காய்க் கூறியிருக்கிறார்கள். ஆகையால் மதுபானம் சிரமப்பரிகாரஞ் செய்கிறதென்பது அறியாமையே யொழிய மற்றப்படியன்று. ஏழை தொழிலாளிகள் தப்பான எண்ணத்தை ஆதாரமாக்கிக்கொண்டு குடியிலே நிலைத்துக்கெட்டுப் போகிறார்கள். சாராயத்திலே செலவிடும் தங்கள் வருமானத்தில் அரைவாசியைத் தேகத்துக்குப் புஷ்டியைத்தரத்தக்க ஆகாரத்தில் செலவிட்டால் எவ்வளவு புத்தியாயிருக்கும். பலத்தை யூட்டத்தக்க ஆகாரத்தைப் புசித்தால் அதிக உற்சாகத்தோடு வேலைசெய்வார்கள். வெய்யில், மழை, பனி முதலியவைகளைச் சகிப்பார்கள், அதை விட்டுக் கள்ளையுஞ் சாராயத்தையுங் குடித்து சரீர பலத்தை யழித்து வீணாய் மடிந்து போகிறார்கள். இது விஷயத்தைப் பற்றி அரசாங்கத் தாரும், பொது நன்மைக்காக பாடுபடும் பரோபகாரிகளும் விசேஷித்த கவலை யெடுக்க வேண்டியதாயிருக்கிறது. மேல் நாடுகளில் அரசாங்கத்தார், தொழிலாளிகள் குடியினாலே அழிந்து போகாதபடி முக்கிய ஏற்பாடுகள் சில செய்து

வருகிறார்கள். ஜெர்மனியில் புதிய சட்ட மொன்றுண்டாக்கப் பட்டிருக்கிறது. தன்வருமானத்தைக் குடியிலே தாரைவார்த்துச் சமுசாரத்தைப் பட்டினியில் வருந்த விடுபவனின் வருமானத்தை அதிகாரிகள் பெற்றுக்கொண்டு தாமாய் அக்குடும்பத்தைச் சம்ரக்ஷிக்கும் பொறுப்புவகித்திருக்கிறார்கள். பெரிய தொழிற்சாலைகளில் ஒரே இடத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள் விஷயத்தில் இப்படிச் செய்வது எளிதாயினும் இந்தியாவிலே சிதறியிருக்கும் தொழிலாளிகள் விஷயத்தில் இப்படிப்பட்ட ஒழுங்கு செய்ய முடியாது. என்றாலும் சாராயம் இலகுவாய் ஏழைகளுக்குக் கிடைக்காதபடி அதன் வரியையுயர்த்தி கவர்ன்மெண்டார் நன்மை செய்யலாம். பரோபகார சங்கங்களும் இதுவிஷயத்தில் விசேஷ அக்கரை காட்டுத லவசியம்.

---

## Drink Problem of India.
## இந்தியாவில் மதுவருந்தல்.

---

ஐரோப்பா முதலிய மேல் நாடுகளையும், இந்தியாவையும் ஒத்திட்டுப் பார்க்கையில் இந்நாட்டில் மதுவருந்தலினால் விளையுங்கேடு அவ்வளவு பயங்கரமாயிருக்கவில்லை யென்பதுண்மையே. பொதுவாக இந்தியர் குடியைவெறுக்கிறவர்கள் என்கிற அபிப்பிராயம் அநேகருக்குள்ளிருக்கிறது. என்றாலும் சில வருஷ காலத்து நடபடிகளைக் கவனிக்கையில் இந்தியா மகா பயங்கரமான குடிகார தேசமாக மாறிக்கொண்டு வருகிறதென்று அநேகர் அஞ்சுகிறார்கள். குடியினாலே மேல் நாடுகளைப் பீடித்திருக்கிற வறுமையும் பிணியும் இந்தியாவையுங் கூட விரைவில் சூழ்ந்து கொள்ளுமென்று பல உத்தமர்கள் நினைத்து உள்ளம் நடுங்குகின்றார்கள். இந்தச் சமயத்திலேதானே அதிகாரிகளும் பரோபகாரிகளும் முயன்று இத்தேசத்திலே குடிவெறி வேர்கொண்டு விடாதபடி பற்றறக் களைந்துபோடவேண்டுமென்று கருதுகிறார்கள். இரண்டொரு மாதங்களுக்கு முன்னே கல்கத்தாவில் இது விஷயமாகப்பேசின மிஸ்டர் A. E. குட்வின் என்பவர் மிகவும் வற்புறுத்துதலோடே இதை யெடுத்துக்காட்டினார். அவர் சொன்னதின் சாரமிது ;—இந்தியர் முற்றிலுங் குடிவெறியையுபேக்ஷிப்பவர்களென்று சொல்லப்படும் பொதுவான பேச்சிலுண்மையுண்டு. ஆயினும் இப்போது அவர்களுக்குள் பரவி வருகிற குடிவெறியைப்பற்றி நடுக்குற வேண்டியதாயிருக்கிறது. மேலை நாடுகளில் மதுவிலக்குச் சங்கத்தார் பிள்ளைகள் மதுபான விஷயத்தில் சிக்கிக்கொள்ளாதபடி தடுத்தலுபாயத்தைக் கையாடி யுழைக்கிறது போலவே இங்கும் ஆரம்பஸ்திதியிலிருக்கிற இந்நாட்டினரைத் தடுக்கப் பாடுபட வேண்டியதவசியம். ஆரம்பத்திலேயே தடுக்க முயன்றால் இத்தீங்கை வேரோடே களைந்து போடலாம். இத்தேசத்தில் தற்காலம் குடிவெறி எல்லா ஜாதியாருக்குள்ளும் பரவி வருகிறது. முப்பது வருஷங்களுக்கு முன்னே லாகிரி சாராயத்தின்மேல் விதித்திருந்தவரியினால் கவர்ன்மெண்டாருக்கு வந்த வருமானம் 17½ லக்ஷம் பவுண் மாத்திரம். இப்போதோ 75 லக்ஷம் பவுண் வருமானம் வருகிறது. எவ்வளவு அமோகமாய் வளர்ந்து விட்டதென்பதைக் கவனிக்க. உட்கொள்ளப்படும் சாராயத்தின் அளவை யெடுத்து ஒப்பனையிட்டுக் காட்டப் போதுமான அனுகூலமில்லை. என்றாலும் சாரயம் காய்ச்சுகிற சில இடங்களில் வடிக்கப்படுகிற கணிதப்படி பார்த்தால் 5 வருஷங்களுக்கு முன்னே 60 லக்ஷம் காலன் சாராயம் வடிக்கப்பட்டது இப்பொழுது 85 லக்ஷமாகப் பெருகியிருக்கிறது. வங்காள மாகாணத்தில் சென்ற ஐந்து வருஷத்தில் சாராயம் நூற்றுக்கு 50 விகிதமாக அதிகப்பட்டிருக்க, ஜனங்கள் நூற்றுக்கு 2 வீதந்தான் அதிகரித்திருக்கிறார்கள். 20 வருஷத்துக்கு முன்னே மேல் நாட்டிலிருந்து வந்து இந்தியாவில் இறக்குமதியான சாராயம் 25 லக்ஷம் காலன். சென்ற வருஷத்தில் இறக்குமதியானது 70 லக்ஷம் காலன். சில வருஷங்களுக்கு முன்னே சில இந்திய ஐரோப்பிய வாலிபர்கள் கூடி கல்கத்தாவில் நடைபெறும் மதுபான வியாபாரத்தைபற்றி விசாரணை செய்ய முயன்ற போது, இம்மட்டும் ஜாதி விலக்கினால் பிரத்தியேகப்பட்டிருந்த இந்தியர் இப்போதுசாராயம் அருந்துகிற விஷயத்தில் ஜாதி விலக்கைப் பொருளாக்காமல்ஒன்றுபட்டுக் குடியிலிறங்கி விட்டதாகக் கண்டார்கள். தற்காலம் சாராயமகத்துவமே ஜாதிக்கட்டைத் தளர்த்திவருகிறது. வெகு சீக்கிரத்தில் இங்கு சர்வம் ஜெகநாத மாவதோடு மேல் நாட்டுக் கஷ்ட நிஷ்டூரங்களும் இத்தேசத்தை யாண்டு கொள்ளும். என்றிவ் விதமாக எடுத்

துக்காட்டி, மதுவிலக்கு விஷயத்தில் உழைக்கக்கங்கணங்கட்டிக் கொண்டவர்கள் இப்போதிருக்கே முயன்று ஊக்கமாய் உழைக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அதோடு தற்காலம் இந்தியாவில் ஐரோப்பியரான பரோபகாரிகள் 250,000 பேர் வரையில் இதற்காக உழைக்கிறதாகவும், இன்னும் அதிகமானபேர் வேண்டிய தென்பதாகவும் கூறினர். இத்தனை ஐரோப்பியர் நமது நாட்டின் க்ஷேமத்துக்கு உழைக்கும்போது இத்தேசத்தின் சொந்தப் பிள்ளைகளில் எத்தனை பேர் இதன் நன்மைக்கென்று பாடுபடுகிறார்களென்றறிய ஆசிப்பது நமது கடமையல்லவா?

## A Pathetic Scene.
## பரிதாப காக்ஷி.

"நான் நேசனுடைய மனைவியல்ல என்னிடத்திலே மண்வெட்டி யில்லை. நான் பைத்தியக்காரியல்ல" என்கிற இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பினத்திக்கொண்டு ஒரு ஸ்திரீ சாராயக்கடையொன்றுக்குமுன்னே நின்று கொண்டிருந்தாள். அவளுக்கெதிரே ஒருபுருஷன் தன்கையிலே, கடைக்காரன் ஊற்றிக்கொடுத்த சாராயத்தைக் கண்ணாடிப்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு அந்த ஸ்திரீயை விரைக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அந்த ஸ்திரீயினுடைய புருஷன். அவன் பேர் நேசன். அவன் ஓயாக்குடியனாயிருந்து தன் வருமானத்தையெல்லாம் சாராயக் கடையிலே கொண்டுபோய்க்கொடுத்துக் குடித்து மனைவியையும் பிள்ளைகளையும் வதையச்செய்து கொண்டிருந்தான். அந்த ஏழை ஸ்திரீ அவனுடைய துர்ச்செயலுக்காக மனம் நொந்து, ஒருநாள் அவன் சாராயக்கடையிற் போய்க் கையிலே சாராயத்தைவாங்கிக் குடிக்கப் போகையில் அவனுக் கெதிரிலே போய் நின்று மேற்கூறிய வார்த்தைகளைச் சொன்னாள். அதோடு அந்தச் சாராயக்கடைக் காரனைப்பார்த்துப் பின்னுஞ் சொல்லுகிறாள்: "ஐயா, இந்த மாதமெல்லாம் இந்த மனிதன் வேலைக்குப் போகவில்லை. தன்னையும் என்பிள்ளைகளையும் நான் கஷ்டப்பட்டுக்காப்பாற்ற வேண்டியதாயிருக்கிறது. இதனாலே நான் எலும்புந் தோலுமாயினைத்துப்போனேன். இவர் தன்குடும்பத்தைப் பட்டினி போட்டுக்கொல்லுகிறதோடு தன் உயிரையும் தேகத்தையுங் கூட நாசப்படுத்திக்கொள்ளுகிறாரே. இதைத் தடுக்க ஏதாகிலும் ஒருகாரியம் செய்யப்பட மாட்டாதா?" என்று பெருமூச்சோடு சொன்னாள். அந்த வார்த்தைகளை அவள் சொன்னபோது அவளின் உதடுகள் துடித்தது. அவளுடைய வெளிறிப்போன முகத்திலே துக்கம் நிறைந்திருந்தது. அவள் கொஞ்சநேரம் நின்று பேசுகிறதற்குஞ் சத்தியில்லாதவளாய் அவளது கால்கள் தள்ளாடினது. அவள் மெலிந்த சரீரமும் தளர்ந்த கைகளும் பதைத்தன. அவளுடைய முந்தானையை பிடித்துக்கொண்டு ஒரு சிறு பெண் நின்றாள். அந்தச்சிறுமியும் அலங்கோல நிலைமையிலிருந்தாள். தாயார் கண்களிலிருந்து நீர் சொரிவதைக் கண்டபெண் தானும் கூக்குரலிட்டு அழுதாள். இந்த நெஞ்சுருக்கத்தக்க காக்ஷி அந்தச் சாராயக் கடைக்காரனுடைய மனதை மெழுகுப் போல உருகச்செய்தது. தலை கவிழ்ந்து ஒன்றும் பேசாமல் நிற்கும் அந்தக் குடிகாரப் புருஷனிடத்திலிருந்த சாராயப்பாத்திரத்தை அவன் மறுபடியும் வாங்கிக் கொண்டான். பிறகு அவன் அந்த ஏழை ஸ்திரீயைப் பார்த்துச் சொல்லுகிறான்: "அம்மா நான் இந்த மனுஷனுக்கு இனி சாராயம் விற்பதில்லையென்று சத்தியமாய்ப் பிரமாணிக்கஞ்செய்கிறேன். நீ வருத்தப்படவேண்டாம். சந்தோஷமாய் வீட்டுக்குப்போ என்று சொல்லியனுப்பினான்." அந்த உத்தமி குடியென்னும் நரகத்தின் வாயிலிருந்து பறித்த தன்பர்த்தாவையும், குழந்தையையும் இட்டுக்கொண்டு சந்தோஷமாய் வீட்டுக்குப் போனாள். இது உண்மையாய் நடந்த ஒரு சம்பவம்.

## H. E. The Viceroy in Madras.
## சென்னையில் இராஜப்பிரதிநிதி விஜயம்.

இந்தியாவின் பலபாகங்களைச்சுற்றிப் பிரயாணஞ் செய்து கொண்டுவந்த மாக்ஷிமை தங்கிய நமது இராஜப்பிரதிநிதி மின்டோ பிரபும் பத்தினியும் டிசம்பர் மீ 9 உ காலை $8\frac{1}{2}$ மணிக்கு, சென்னை சென்ட்றல் ஸ்டேஷனில் வந்திறங்க, சென்னை வாசிகள் மகா கொண்டாட்டத்துடனே அவர்களை வரவேற்றார்கள். சென்ட்றல் ஸ்டேஷனிலிருந்து பெனிடென்ஷரி பாடிகார்ட்லேன் மார்க்கமாய் கவர்னர் மாளிகை வரையில் வழி நெடுக போர் வீரர்கள் ஆயுத பாணிகளாய் இருமருங்கும் அணிவகுத்து காவல் புரிய, திரளான ஜனங்கள் ஒருவரை யொ

ருவர் மிதித்து நெருக்கிப் புடை சூழ்ந்தி
ருக்க, ஆகாயம் அதிரத்தக்கதாய் 31 குண்
டுகள் வெடி தீர இராஜப்பிரதிநிதி நமது
கவர்னர் சமேதராயும், மின்டோ பெரு
மாட்டி கவர்னர் பெருமாட்டி சமேதராயும்
நான்கு புரவிகள் பூட்டிய அரசாங்க இரத
ங்களிலேறி முன்னும் பின்னும் குதிரை
மீது எறிய போர் வீரர்கள் சூழ்ந்து வர,
செண்ட்றல் ஸ்டேஷனிலிருந்து கவர்னர்
மாளிகை போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள்
பவனிபோகையில் ஜனங்கள் காது செவிடு
படும்படியாய்க் கரகோஷஞ்செய்து தங்
கள் மனக்கிளர்ச்சியைத் தெரிவித்தார்கள்
$8\frac{3}{4}$ மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில்
பொது வரவேற்பு நடந்தது. எற்கனவே
அங்கு கூடி வந்திருந்த தேசமன்னர்களும்,
ஜமீன்தார்களும், உத்தியோகஸ்தரும், பெரி
யோரும், நகரவாசிகளும் இராஜப்பிரதிநிதி
யை விமரிசையாய் வரவேற்றுபசரித்தார்
கள். 10 மணிக்கு கவர்ன்மெண்டு மாளி
கையில் பலவித பொதுஸ்தாபனத்தைச்
சேர்ந்தவர்களும் இராஜப்பிரதிநிதிக்கு உப
சரிப்புப்பத்திரங்களை வாசித்துக் கொடுத்
தார்கள். மகமதியர், சென்னை வர்த்தக
சபையார், நிலசுவான்தார் சங்கத்தார்.
சென்னை மகாஜனசபையார், ஆங்கிலோ
இந்திய சங்கத்தார், இந்திய கிறிஸ்தவ சங்
கத்தார், கத்தோலிக்கு கிறிஸ்தவ சங்கத்
தார், காங்கிரஸ்மாகாண கமிட்டியார் ஆகிய
இந்த எட்டு வகுப்பாரும் உபசரிப்பு பத்தி
ரங்கள் வாசித்தார்கள். இவைகளில் விசே
ஷமாய் லார்ட் மின்டோவும், இந்திய மந்தி
ரியும் சட்ட சபைதிருத்த விஷயத்தில் இந்
தியாவுக்குச்செய்த பேருபகாரத்தைஸ்தோ
த்திரித்திருந்தது. இந்திய கிறிஸ்தவர் அ
ளித்த பத்திரிகையில் சொல்லியிருந்த இர
ண்டொரு விஷயத்தை யீண்டு கூறுகி
றேம். இந்தியன் சிவில் சர்விஸ் பரிட்சை
யில் தேர்ந்த நான்கு கிறிஸ்தவர்கள், இந்த
இராஜதானியிலிருந்தும் ஒருவருக்காவது க
லெக்டர் அல்லது ஜில்லா ஜட்ஜ் வேலை
இதுவரையில் கொடுக்கப் படவில்லையென்
றும், சென்னை ஷெரிப்பாக நியமிக்கப்படு
கிறவர்கள் ஐரோப்பியர், மகமதியர், இந்து
க்களாக இருக்கிறார்களேயன்றிச் சுதேசக்
கிறிஸ்தவர்களில் ஒருவரும் நியமிக்கப்பட
வில்லை யென்றும், லோக்கல் சட்டசபை
யில் சுதேசக் கிறிஸ்தவ மெம்பர் இருந்த
தே யில்லை யென்றும், ஆனால் சென்னை
முனிசிபாலிட்டியின் சிபாரிசின்மேல் ஒரு
வர் மட்டும் ஒரு முறை இருந்தார் என்றும்,
அதுவும் சொற்ப காலமே யென்றும், இ
தனால் சுதேசக் கிறிஸ்தவர்களாகிய தாங்க
ள் மற்ற வகுப்பாரை விட அலட்சியமாய்க்
கருதப்படுகிறார்க ளென்பது புலனாகிறதெ
ன்றும் இக்குறையை அரசாங்கத்தார் நீக்க
வேண்டுமென்றும் இந்த அட்ரஸில் கண்டி
ருந்தது. இப்படியேமற்றவர்களும் அவரவர்
களுக்குரிய காரியங்களைச் சொல்லிக் கொ
ண்டார்கள். இவைகளுக்கெல்லாம் ஒரே
மட்டாய் லார்ட் மிண்டோ உத்தரமளித்
தார். அவருடைய உத்தரவின் மொத்த
சாரம் அவரவர்களுக்குரிய உரிமைகளும்
பாதுகாக்கப்படும் என்பதும், கவர்ன்மெண்
டார் அதுவிஷயத்தில் பக்ஷபாதம் செய்வ
தில்லையென்பதுமே. மொத்தத்திலே எல்
லாம் உபசாரப் போங்காகவே இருந்தது.
இவருடைய விடையிலே தம்முடைய குடு
ம்பம் சென்னைப் பட்டணத்தோடு எவ்வாறு
சம்பந்தப் பட்டிருக்கிறதென்று சிலகாரி
யங்களையெடுத்துச் சொன்னார். 100 வரு
ஷங்களுக்குமுன்னே கவர்னர் ஜெனரலாக
வந்த லார்ட்மின்டோவாகிய இவர்மூதாதை
வெகுகாலம் இங்கே வசித்தவர் என்றும்,
பிறகு இங்கே கவர்னராய் வந்த ஹியூ எலி
யட் அவர் சகோதரர் என்றும் சென்னை ரா
ணுவசேனாபதி யாயிருந்த சர்தாமஸ்ஹிஸ்லா
ப்பின் மனைவி தம்முடைய தாயார் என்று
ஞ்சொல்லி இதனையெல்லாம் இந்த மாகா
ணத்தோடு தாம் அதிகம் சம்பந்தப்பட்டவ
ரென்றும், ஆகையால் நம்மைப்பார்ப்பது
மிகவும் குதூஹலமென்றுஞ் சொன்னார்.
அன்று சாயங்காலம் ஜார்ஜ் டவுனில் பவ
னி வந்தார். நகர வாசிகளெல்லாரும் கண்
குளிரக் கண்டு வாழ்த்த இடமிருந்தது.
மறுநாள் காலை கவர்ன்மெண்டு மாளிகையி
ல் டார்செட்ஷயர் இராணுவத்துக்கு
அதன் வீரச்செய்கையை மெச்சிப் புதிய
கொடியளித்தார். அன்று மத்தியானம்
அரசர்கள் ராஜபேட்டி கண்டார்கள். மா
லை பதில் பேட்டி அளித்தார். இரவு 8
மணிக்கு இராஜ விருந்து நடந்தது. சனிக்
கிழமை காலை பீபில்ஸ் பார்க்கில் கட்டப்ப
டப்போகிற ரிப்பன் மாளிகை யென்கிற
புதிய முனிசிபல் கட்டிடத்திற்கு அஸ்தி
வாரக்கல் நாட்டினார். இந்தச் சமயத்தில்
சென்னை முனிசிபாலிட்டியார் தங்கள் உ
பசாரப் பத்திரிகையை வாசித்துக் கொடுத்
தார்கள். அதற்கும் பதில் சொன்னார்.
மாலை காஸ்மாபாலிடன் கிளப் விருந்துக்
குப் போனார். ஞாயிற்றுக்கிழமை கிண்டி
யில் தாமதித்தார். திங்கட் கிழமை காலை
பரங்கிமலையில் கிங் சாலையைப்போய்ப்
பார்த்தார். மாலை ஆர்க்காட்டு நவாபு விரு

ந்துக்குப் போனார். இரவு 10½ மணிக்கு சென்ட்றல் ஸ்டேஷனில் வண்டியேறி நேரே கல்கத்தாவுக்குப் பிரயாணமானார்.

---

## Great World's Events-1909.
## சென்ற வருஷத்து விசேஷ உலக சம்பவங்கள்.

---

**இத்தாலியாவில் பூமியதிர்ச்சி** :-1908ஹு டிசம்பர்மீ 28வ இத்தாலியாவின் தென்பாகத்தில் சிசிலித்தீவில் பயங்கரமான பூகம்ப முண்டாகி மெசினு, ரெக்கியோ என்கிற இருபட்டணங்கள் பாழாயின. 2 லக்ஷம் ஜனங்கள் மடிந்தார்கள்.

**துருக்கி சுல்தான் அரசிழந்தது** :—துருக்கியில் குடி ஜன கலகமுண்டாகி, ஜனப்பிரீதிக்கு விருத்தமாய் அரசாக்ஷி செய்த சுல்த்தான் அப்துல் அமீதைச் சிம்மாசனத்தினின்று நீக்கி, அவனையும் அவருடைய 11 மனைவிகளையும், இருபிள்ளைகளையும் சலோனிக்கா என்னுமிடத்துக்கு அனுப்பி விட்டார்கள். அவருடைய சகோதரன் சுல்த்தானாக அபிஷேகஞ் செய்யப்பட்டார். கலக காலத்தில் 15,000 ஆர்மீனியர் சங்கரிக்கப்பட்டார்கள். இரண்டு மிஷனெரிமாரும் உயிரிழந்தார்கள்.

**பெர்ஷியா அரசர் தள்ளுண்டார்** :—பெர்ஷியாவிலும் ஜனங்கள் கலகம் புரிந்து தங்கள் விருப்பத்துக்கெதிரிடையாய் நடந்த ஷா அரசனைத் தள்ளிவிட்டு, 13 வயதுடைய அவருடைய குமாரனை அரசனுக்கிக் கொண்டார்கள்.

**வடதுருவங்கண்டு பிக்கப்பட்டது** :—வெகு காலமாய் வடதுருவத்தைக் கண்டுபிடிக்கும் படி முயற்சி நடந்தது. சென்ற வருஷத்தில் டாக்டர் குக், கமாண்டர் பியாரி என்கிற இரு அமெரிக்கரும் கண்டு பிடித்து வந்ததாக உலகத்துக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களில் டாக்டர் குக் பொய் பேசி யேய்த்ததாக அறிவிக்கப்படுகிறது.

**ஆகாயக்கப்பல் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்தது** :—பிளரியற் என்கிற பிரஞ்சு நிபுணன் ஆகாயக் கப்பலேறி பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கு மிடையிலுள்ள 25 மைல் அகலமான இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து போனார்.

**ஸ்பானிய மொறேக்க யுத்தம்**:—ஸ்பானியாவுக்கும் மொறேக்காவுக்கும் ஒருயுத்தம் நடந்து,முதலில் ஸ்பானியர்அபஜெயமடைந்தும் கடைசியில் வெற்றியடைந்தார்கள் இந்தயுத்த சம்பந்தமாய் பார்விலோனுவில் ஒரு குடி ஜனக்கலக முண்டாகிப் பலர் மடிந்தனர்.

**இந்திய சட்டசபை சீர்திருத்தம்** :—இந்தியாவில் சுதேசிகளுக்கு இராஜ்யபார நிர்வாகத்தில் விசேஷ உரிமை கிடைப்பதற்கேதுவாக இந்திய சட்ட சபைகள் ஒழுங்கில் சில விசேஷித்த சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இராஜப்பிரதிநிதி, மாகாண கவர்னர்கள் ஆலோசனை சபைகளில் இந்தியர் சமசுதந்தரத்தை இந்தச் சீர்திருத்தங்களா லடைந்திருக்கிறார்கள்.

**மைசூரில் ஆசார சீர்திருத்தம்** :—மைசூர் கவர்ன்மெண்டார் மகா புத்தியாயும் தைரியமாயும் அந்த ஸமஸ்தானத்திலுள்ள இந்து ஆலயங்களில் தேவதாசிகள் நடனஞ் செய்யக் கூடாதெனக் கண்டிப்பான சட்டஞ்செய்திருக்கிறார்கள். சிறு பெண்களை விவாகஞ்செய்து கொடாதபடி சட்டஞ்செய்தவர்களும் அந்த துரைத்தனத்தாரே. ஆசார சீர்திருத்த விஷயத்தில் அந்த தேச ராஜ்யம் மிகுந்த அக்கரை காட்டுவது சந்தோஷத்துக்குரிய விஷயம்.

---

## News and Notes.
## சமாசாரக் குறிப்புகள்.

---

**நாசிக் கலெக்டர் கொலையுண்டது** :—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த நாசிக் கலெக்டாயிருந்து வந்த மிஸ்டர் A. M. T. ஜாக்ஸனை டிசம்பர் மீ 21வ இரவு 18 பிராயமுள்ள ஒரு பிராமணப்பையன் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்து விட்டானென்கிற துக்க செய்தி யெட்டியிருக்கிறது. மிஸ்டர் ஜாக்ஸன் ஜனங்களால் விரும்பப்பட்ட கலெக்டர். அவர் சமீபத்தில் பம்பாய்க்கு மாற்றப்பட்டுபோகிற படியால் ஜனங்கள் அவருக்கு ஒரு தோட்டக்கச்சேரி வைத்து உபசரித்தார்கள். அந்த உபசரிப்புக்குப் போனகாலத்தில்தான் இந்தப் பாதகச் செயல் நடந்தது. கொலைப்பாதகன் பிடிபட்டிருக்கிறான். சில நாட்களுக்குமுன் மிஸ்டர் ஜாக்ஸன் இராஜதுரோக குற்றத்திலகப்பட்ட சவேர்க்கார் என்பவனை ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிக்ஷைக்குத் தண்டித்தார். அதுகாரணமாய் இப்பாதகன் அவரைக் கொலைபுரிந்ததாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் அராஜகச்செயலுக்குக் காரணமாயிருக்கிற இப்படிப்பட்டதுஷ்டரை வேரோடு களைய அரசாங்கத்

தார் முயன்றாலல்லாமல் இவ்வித அகிருத்தியம் நீங்காது.

ஐக்கிய மாகாணத்து இந்திய கிறிஸ்தவர் :—ஐக்கியமாகாண இந்தியக் கிறிஸ்துவச் சங்கத்தார் தங்கள் வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதி யொருவருக்கு ஐக்கியமாகாணச் சட்டசபையில் அம்மாகாணக் கவர்மெண்டார் இடங்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதுமன்றி, அந்த ஸ்தானத்தை வகிக்க ஸர் ஹரி ராம்சிங்கையும் ஜெய்ப்பூர் ராஜா ஷியாம்சிங்கையும் போன்றவர்கள் லாயக்குள்ளவர்கள் ஆவார்களென்றும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ருஷியாவும் ஜப்பானும் :—சிலகாலமாக ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் மறுபடியும் யுத்தமுண்டாகப் போகிறதென்று புகைந்துக்கொண்டிருந்த வதந்தியில் உண்மையில்லையென்றும், தற்காலம் ஷை இருதேசங்களுக்கும் உண்டாயிருக்கிற சம்பந்தத்தால் அப்படிப்பட்ட காரியத்துக்கு இடமில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு விவாதம் :—பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் லார்ட்ஸ சபைக்கும், காமன்ஸ் சபைக்கும் அரசிறை கணக்கு ஜாபிதா விஷயமாய்ப் பெரிய விவாதமுண்டாகிக் குழப்பமான நிலைமையிலிருப்பது நேயர்களுக்குத் தெரியும் தற்போதைய மந்திராலோசனை சபை கலைக்கப்பட்டு ஜனவரிமாத மத்தியில் புதிய சபை கூட்டப்படும். அதற்கு மெம்பர்கள் தெரிந்தெடுத்தலை யடுத்த முயற்சி ஜரூராய் நடந்து வருகிறது. அந்தந்த கக்ஷியாரும் தத்தம்மைத்தாங்கிக் கைகொடுக்கக் கூடிய ஒட்டர்களை ஒன்று கூட்டி அவர்களிடம் பேசி அவர்களுடைய ஆதாரவைப்பெற்று வருகிறார்கள். பொது எலெக்ஷன் நிறைவேறி முடிவதற்குள் இப்படிப்பட்ட கூட்டங்கள் 100,000 க்குக் குறையாமல் கூட்டப்படுமென்று தெறியவருகிறது.

விவசாய விஷபத்தில் ஆலோசனை :—இந்த இராஜதானியில் விவசாய தொழில் விஷயத்தில் பிரஜைகளுக்குத் தகுந்த ஆலோசனை கூறும்படிக்கும், அதற்குரிய சாதகங்களை யேற்படுத்தும் பொருட்டும் விவசாய இலாகா ஒன்று எற்பட்டிருக்கிறதல்லவா? இந்தவிஷயமாய் ஆலோசனை வேண்டியவர்களெல்லாரும் வட டிவிஷன் டிப்டி விவசாய டைரக்டருக்காவது, தென் டிவிஷன் டிப்டி விவசாய டைரக்டருக்காவது, கோயமுத்தூர் விவசாய காலேஜ் அதிபருக்காவது எழுதி ஆலோசனை பெறலாமென்று சென்னை விவசாய டைரக்டர் மிஸ்டர் M. E. கௌச்மன் விளம்பரஞ்செய்திருக்கிறார்.

இந்தியாவுக்கு சீமைப் பசுக்கள் :—கிரேட் பிரட்டனில் கிடைக்கக்கூடிய பெரிய பசுக்களில் நான்கு கல்கத்தாவிலுள்ள ஒரு இந்திய மகாராஜாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் உயரம் 5½ அடி. நீளம் 14 அடி. இவைகளை அந்த மகாராஜா இந்தியாவில் அபிவிர்த்தி செய்யும் நோக்கமாய் வாங்கி யிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ரெயில்வே திருடர் கூட்டம் பிடிபட்டது :—பம்பாய் பரோடா மத்திய இந்தியா இருப்புப் பாதையிலும் கிரேட் இந்தியன் பெனின்ஸுலர் இருப்புப் பாதையிலும் மதராஸ் அண்ட் ஸதரன் மராட்டா இருப்புப் பாதையிலும் வெகு நாளாய் திருடிக்கொண்டு வந்த சுமார் 100 பேர் கொண்ட திருடர் கூட்டத்தைச்சேர்ந்த 12 பேர் பிடிக்கப்பட்டு புனா கலெக்டரின் முன் சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தத திருட்டுக் கூட்டத்தாரில் ஹிந்துக்களும் பஞ்சாபி மகமதியர்களுமே பெரும்பாலர் எனப்படுகிறது. அத்திருட்டுக் கூட்டத்தார் கந்த்வா, பூஸாவல், மஸ்மார் போன்ற ஜங்க்ஷன் ஸ்டேஷன்களில் தான் திருட்டுத் தொழில் செய்வது வழக்கமாம். போலீஸார் தங்களைப் பிடித்து விடுவார்கள் போல் தோற்றினால் அவர்கள் வடக்கே டில்லி வரையில் போய்விடுகிற வழக்கமாம். அவர்கள் மேலே சொன்ன இருப்புப் பாதைகளில் பிரயாணிகளை யொப்பவே பிரயாணஞ்செய்து சமயம்பார்த்துக் கொள்ளையடித்துக் கொண்டுபோவார்களாம்.

விவசாயக் கலாசாலையும் பண்ணையும் :— நமது இராஜதானியில் விவசாயத்தொழிலை விர்த்தி பண்ணுமாறு கோயமுத்தூரில் அரசாங்கத்தார் ஒரு விவசாய கலாசாலையையும் 45 ஏக்கர் கொண்ட ஒருமாதிரிப்பண்ணையையும் ஸ்தாபித்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 FEB 1910
MADRAS

# ACKNOWLEDGMENTS.

The Manager of the *The Madras Temperance Hearld* begs to acknowledge, with thanks, receipt of the following remittances, January 1910.

| | Rs. | A. |
|---|---|---|
| E F. Straneck Esq. Kodai Kanal | 12 | 0 |
| Manek, D. Mugaseth Esq. Sivaganga | 12 | 0 |
| Arthur. Davies Esq. Bar-at-Law | 10 | 0 |
| S. R. Kishnama Esq. I.C S. | 6 | 0 |
| E. R. Osborne Esq. Bar-at-Law | 5 | 0 |
| A. Moffat Rev. M.A., B S.C., Christian College | 5 | 0 |
| Eden. B. Ross Esq. M.A., Christian College | 3 | 0 |
| M. D. D. | 1 | 0 |
| Rev. L. G. S. Price, C. M. S. High School, Palamcottah | 3 | 8 |
| Rev. S. G. Mathuram, B.A., L.T., Palamcottah | 1 | 8 |
| D. Rajendram Esq. B.A., B.L., Palamcottah | 1 | 8 |
| T. B. Pandyan Esq. Palamcottah | 1 | 8 |
| T. V. M. Ponnusawmy Devar, Clerk, Mission Office, Nazareth | 1 | 0 |
| C. P. Gnanapragasam Esq. Clerk, S. P. G. Office, Ramnad | 1 | 8 |
| B. Devanayagam Esq. B.A. Singara Tope, Ramnad | 1 | 8 |
| C. Solomon Esq. B.A., Ramnad | 1 | 8 |
| Stephen Esq. B.A., L.T., Ramnad | 1 | 8 |
| T. N. Devasahayam Esq. S. P. G. Press, Ramnad | 1 | 0 |
| R. Jothimuthoo Esq. Gymnastic Instructor, S. P. G. High School, Ramnad | 1 | 0 |
| V. James Esq. Pamban, Madura District | 1 | 0 |
| Mr. A. Swamiadiyan, Catechist, Veerambal, Madukulutur, Ramnad | 1 | 0 |
| R. Augustine Esq. Catechist, Maelakiddaram, Mariyur, Ramnad | 1 | 0 |
| V. Swamiadiyan, Catechist, Madathakulam, Mariyur Post, Ramnad | 1 | 0 |
| Mr. I. A. M. Ambrose Pillai, Native Doctor, Kamatchipuram, Sandaipettah, Madura | 1 | 0 |
| John D. Martyn Esq. Government Telegraph Department, Madura | 1 | 8 |
| Rev. W. A. Sironmani, Idaiyerkadu, Sawyerpuram | 1 | 8 |
| Mr. J. P. Israel S. M. Rajavin Coil, Tattaparei Post | 1 | 0 |
| Rev. A. Gnanakan. Caldwell High School, Tuticorin | 1 | 8 |
| Rev. A. Gnanamani, Tuticorin | 1 | 8 |
| A. Thomas Esq. Victoria School, Tuticorin | 1 | 0 |
| A. Jonathan David Esq. Special Magistrate, Tuticorin | 1 | 8 |
| P. Bulogapandia, Thalaiver, No. 3, Veeramonia Pillay street, North Tuticorin. | 1 | 0 |
| Jeremiah Pillay Esq. Salt Assistant Inspector, Tuticorin | 1 | 8 |
| G. G. Christian Esq. S. I Railway Station, Tuticorin | 1 | 0 |
| Eleazer Ignatius B.A., Sub-Registrar, Tuticorin | 1 | 8 |
| Rev. S. Caleb S. P. G. Sawyerpuram | 1 | 8 |
| Mr. M. Frederick, M. D. C. Agent, Sawyerpuram | 1 | 0 |
| Rev. D. Packianathan, S. P. G. Swayerpuram | 1 | 0 |
| Mr. Daniel Jacob, Teacher, S. P. G. Nazareth | 1 | 0 |
| Mr. D. S. Masillamoni Esq. B.A., Nazareth | 1 | 0 |
| Rev. D. Devapuriam Ebenezer, Nazareth | 1 | 8 |
| Rev. D. Perianayagam B.A., Nazareth, Tinnevelly District | 1 | 8 |
| Rev. E. Joseph, Rose Villa, Nazareth | 1 | 8 |
| S. Vedamuthoo Esq. Puthur, Trichinopoly | 1 | 0 |
| M. James, Veterinary Assistant, Tinnevelly Bridge | 1 | 8 |
| Rev. R. Swamidasen, S. P. G. Puthur, Trichinopoly | 1 | 8 |

| | Rs. | A. |
|---|---|---|
| J. Gnanamuthoo Esq. Puthur, Trichinopoly ... ... ... | 1 | 8 |
| P. Alxander Esq. Puthur, Trichinopoly ... ... ... | 1 | 0 |
| A. Winslow Esq. Woriur, Trichinopoly ... ... ... | 1 | 8 |
| W. Chinniah Esq. Sub-Registrar, Palakodu Salem District ... ... | 1 | 8 |
| Rev. S. Gnanayutham, S. P. G. Tepakulam ... ... ... | 1 | 8 |
| Mr. S. Deivanayagam, Clerk, Mathupattai, Post Office, Via Periakulam ... | 1 | 0 |
| Mr. D. Devanasen, Head Master, W. M. School, Salapakam near Chinglepet ... ... ... | 1 | 0 |
| Mr. A. C. Iyasamy Pillay, Kokine Club, Bounden P. O. Rangoon ... | 1 | 0 |
| Mr. P. Murugasem Pillay, Superintendent, Forest Office, Maymyo ... | 1 | 8 |
| Mr. L. Ramasamy, Burmah Brewery Agent, Strand Road, Rangoon .. | 1 | 0 |
| Rev. D. Rajamoni, Trichinopoly ... ... ... | 1 | 8 |
| Rev. R. Samuel, Calicut ... ... ... ... | 1 | 8 |
| Mr. C. J. Prachikhar, L. M. S. Bagalkot, S. M. Country, Bombay ... | 1 | 0 |
| Rev. S. Packianathan, Coimbatore ... ... ... | 1 | 8 |
| Mr. T. V. Kundasamy Pillay, Mogamnad Estate, Nagalur P. O. Shevroy Hills | 1 | 0 |
| Rev. R. D. Downes, M. A. Trichinopoly College, Trichinopoly ... ... | 1 | 8 |
| Mr. Anthony, Catechist, Munnar ... ... ... | 1 | 8 |
| Rev. S. Theophilus, Villapuram ... ... ... | 1 | 8 |
| Rev. A. F. R. Bird M. A. Nandyal ... ... ... | 1 | 8 |
| Mr. G. Kuttiappa Nair, Village Munsiff, Palghat. Polpuli ... | 1 | 0 |
| G. A. Williams Esq. 45 St John's Church, Bangalore ... | 1 | 8 |
| Mrs. Walker, 12 Cubbon Road, Bangalore ... ... | 1 | 8 |
| C. A. Darness Esq. Municipal Hospital, Coonoor ... ... ... | 1 | 0 |
| Miss. Crouch. London Mission, Salem ... ... ... ... | 1 | 8 |
| T. S. Devadasen Esq Medical Officer, Ariyalore, Trichinopoly District ... | 1 | 8 |
| J. P. Cotelingam, Esq. M. A. Principal, Wardlaw College, Bellary ... | 1 | 8 |
| Mr. Peter Canickam Singh, Waltair Club, Waltair ... ... ... | 1 | 8 |
| Messrs James and Company, Ootacamund ... ... | 1 | 8 |
| Rev. P. N. Appavoo. Free Church Mission, Ching epet ... ... | 1 | 0 |
| Mr V. Thumbusamy c/o E. E. Bexley Esq. Trinchinopo y ... ... | 1 | 0 |
| Mr. A. Gnanamuthoo. S. P. G. Paramakudi ... ... ... | 1 | 0 |
| Rev. R. Visavasam Singara Tope, Ramnad ... ... ... | 1 | 0 |
| Rev. J. Rowland, West Gate, Madura ... ... ... ... | 1 | 0 |
| S. K. Devasigamony Esq. B A, L.T., Woriur, Trichinopoly .. ... | 1 | 0 |
| P. Simon Esq. Woriur, Trichinopoly ... ... ... | 1 | 0 |
| Rev. Arul Samuel, S. P. G. Muthukulaton Ramnad ... ... | 1 | 8 |
| Mr. D. Jeremiah. Runnymyede Estate P. O. Coonoor ... ... | 1 | 8 |
| Mr. A. Kanagasabah Pillai, supply and transport office Maymyo ... | 1 | 8 |
| Mr. C. Madurai Pillay, Cashier, Pegu Club Rangoon ... ... | 1 | 8 |